1981 ஏப்ரல் 3]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த சிமிண்ட் குழாய் போன்றவைகளைப் புதிதாக தயாரிக்க பெர்மிட் கொடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இந்தத் தொழிலை செய்கின்றவர்கள், அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலேயும் தொழிலை விஸ்தரிக்கின்ற நிலையிலே உள்ளவர்களுக்கும் அதிகமான கோட்டா சிமிண்ட் ஒதுக்க மறுக்கப்படுகின்றது. அதேமாதிரி கட்டிடங்களுக்குத் தேவையான மொசைக் டைலஸ் போன்றவற்றைத் தயாரிக்கக் கூடியவர்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த நிலையினை அரசு அறியுமா? இந்த நிலையைப் போக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, சிறுசிறு அளவிலே இதைப்போன்ற சிமிண்ட் பொருட்கள் தயாரிக்கின்ற நிறுவனங்களின் தேவை 18 டன்னுக்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்கலாம். ஆனால் பலர் இப்படி சிறு சிறு நிறுவனங்கள் என்று பதிவு செய்து வைத்துக்கொண்டு தனக்குரிய கோட்டா சிமிண்டை வாங்கி சிறு தொழில்களைச் செய்யாமல் அப்படியே விற்றுவிடுகின்ற நிலைமை இருக்கின்றது. இவற்றை எல்லாம் முழுமையாக ஆய்வு செய்துதான் 18 டன்னுக்கு குறைவாக சிமிண்ட் தேவைப்படுகின்ற நிறுவனங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்குகிறார்கள்.

சிமெண்ட் பற்றாக்குறை.

*வினா எண் 626—திருவாளர்கள் ந. ரமணி, இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிமெண்ட் கிடைக்காத நெருக்கடி வளர்ந்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கள்ள மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது பற்றி அரசின் கவனத்திற்கு பொதுவாக அவ்வப்பொழுது கொண்டு வரப்படுகிறது.

(இ) குறிப்பாக கொண்டு வரப்படும் குற்றச்சாட்டுகளில், மாவட்ட ஆட்சியாளர்கள் அத்தியாவசியமான பண்டங்கள், மற்றும் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளில் அளித்துள்ள அதிகாரத்தின்படி, பதுக்கல் கள்ள மார்க்கெட் முதலிய வகைகளில் ஈடுபடும் தனி நபர் மற்றும் வியாபாரிகளின் மீது அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி மன்றங்களில் வழக்கு போடப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியினுடைய முதல் பகுதியிலேயே சிமெண்ட் கிடைப்பது நெருக்கடியான நிலைமையில் இருப்பது பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி சிமெண்ட் கிடைப்பதே நெருக்கடியாக இருக்கும் நிலையில், சில இடங்களில் செங்கல் வடிவிலே உள்ள சிமெண்ட் கற்களை உபயோகித்து கட்டிடங்கள் கட்டப் பெறுவதையும், தெருவிலே பெயர்ப்பலகை வைக்கிறபோது, அதற்கு கருங்கற்களை பயன்படுத்தாமல் சிமெண்ட் பலகைகளை பயன்படுத்துவதையும் தடுத்து அதை மிச்சப்படுத்துவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : செங்கல்வடிவிலே சிமென்டை யார் பயன்படுத்துகிறார்கள்? கொஞ்சம் விளக்கம் கூற முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் யோசனையைத் தான் சொல்கிறார். சிமெண்ட் மிச்சப்படுத்துவதற்கு நல்ல யோசனைதான் இது. திரு. பாபு ஜனார்த்தனன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டில்தான் சிமெண்ட் கிடைக்கிறது. ஓபன் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. கள்ள மார்க்கெட்டில் விலை அதிகமாக இருப்பதால், அதை பணக்காரர்கள் தான் வாங்க முடியும். ஏழைகளால் வாங்க முடிவதில்லை. ஆகவே 1, 2, 3 மூட்டைகள் தேவைப்படுகிற சாதாரண குடிசை வாழ் மக்களின் உபயோகத்திற்கு, சிமெண்ட் மூட்டைகள் தாராளமாக கிடைப்பதற்கு, ஒரு எளிய ஏற்பாட்டை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே உள்ள வட்டார அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அனுமதியைப் பெற்று, சாதாரண மக்கள் சிறிய அளவில் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் முழு அளவில் சிமெண்ட் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை நமக்கு இல்லாததற்குக் காரணம் மத்திய அரசிடம் இருந்து நாம் கேட்டிருந்த அளவிற்கு சிமெண்ட் வரவில்லை என்பதுதான். 1981ஆம் ஆண்டுக்கான முதல் குவார்ட்டருக்கு 1 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாக வேண்டும் என்று கேட்டிருந்

தோம். ஆனால் அவர்கள் 25,000 மெட்ரிக் டன்கள் தான் கொடுத்தார்கள். சென்ற ஆண்டு, 3,95,400 மெட்ரிக் டன்கள் கொடுத்தார்கள். ஆனால் தேவை அதைப்போல மூன்று மடங்கு இருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலேதான் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டில் தாராளமாக சிமெண்டு கிடைக்கிறது. ஆனால் ஒபன் மார்க்கெட்டில் கிடைக்கவில்லை என்றால், உற்பத்தி அதிகம் இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் கள்ள மார்க்கெட் அதிகமாகியிருக்கிறது என்பது தான் பொருள். அதை ஒழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டில் தாராளமாக கிடைக்கிறது என்பதை ஒத்துக் கொள்வதற்கில்லை. கள்ள மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது பற்றி அரசின் கவனத்திற்கு பொதுவாக அவ்வப்போது கொண்டு வரப்படுகிறது என்றுதான் சொன்னேன். அப்படி எங்காவது வெளியில் நடப்பதாக உறுப்பினர்கள் அறிந்தால், எங்களிடம் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே தனியார் சிமெண்ட் ஆலை லாபகரமாக நடக்கிறது. அரசினுடைய சிமெண்ட் ஆலை 8 கோடி ரூபாய் நஷ்டம் காட்டியிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அதைப் போக்க என்ன நடவடிக்கையை அரசு எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

திரு. ப. தீர்த்தராமன் : சிமெண்ட் பெர்மிட்டுகளைப் பெற ஒரு நபரே பல பெயர்களில் விண்ணப்பங்களைக் கொடுத்து, சிமெண்ட் மூட்டைகளை வாங்கி கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்களே, அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. அழகர்சாமி.

திரு. குமரி அனந்தன் : திரு. தீர்த்தராமன் அவர்களின் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வராது. பதில் பெறுகிற அளவிற்கு கேள்விகள் கேட்டால்தான் பதில் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது, சிமெண்ட் மூட்டைகள் அதிக அளவில் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்பதாக சொன்னார்கள். அது தேவை தான். ஆனால் இருக்கிற சிமெண்டை தேவைப்படுகிறவர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில், பெர்மிட்டுகள் கொடுக்கின்ற அலுவலகத்தில், விண்ணப்பங்கள் பெற்று வரிசைப் பிரகாரம், ஒரு பட்டியலைப் போட்டு, இன்னின்னாருக்கு இவ்வளவு சிமெண்ட் மூட்டைகளுக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வரிசைப் பிரகாரம், பட்டியல் போட்டு கொடுக்கும் வகையில் ஒரு முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா? ஏனென்றால் பெர்மிட் பெற்றவர்களே திரும்ப திரும்ப பெற்று வெளியில் விற்றுக் கொண்டிருப்பதினால் தான் கள்ள மார்க்கெட் அதிகமாகிறது. அதை குறைக்கும் வகையில் இத்தகைய நடைமுறையைக் கொண்டு வர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்? (பதில் இல்லை.)

[முற்பகல் 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ, வருகிற மனுக்கள் தேவையின் அடிப்படையில் முறையாகப் பரிசீலிக்கப்படுகிறது. அதில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால், வட்டாட்சி அலுவலகத்திலோ அல்லது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ இருக்கிற அதிகாரிகள், பீ.டி.ஓ. அல்லது தாசில்தார் யாராவது தவறு செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு உப்பு உற்பத்தி நிறுவனம்

*வினா எண். 627—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—